# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## க.பொ.த (சாதாரணதர)ப்பரீட்சை - 2019

## மூன்றாம் தவணை

| புவியியல் | 61 | T | I,II | நேரம் - 3மணித்தியாலம் |
|---|---|---|---|---|

சுட்டெண் ........................................

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### புவியியல் I

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. ஆசியாக்கண்டம் புவியின் வட அரைக்கோளத்தில் ........................................................ அரைப்பகுதியில் அமைந்துள்ளது.
(கிழக்கு, தெற்கு, மேற்கு)
2. 1 : 50000 தேசப்படம் ஒன்றில் சாதாரணமாக இடவுயரம் என்பது ........................................ எனக்குறித்துக் காட்டப்பட்டிருக்கும். (Δ828, 118, 200)
3. இயங்கு தன்மை கொண்ட எண்ணக்கருவாகிய ........................................................ என்பது வரையறுக்க முடியாத தொடர்ச்சியான எண்ணக்கருவாகும். (வளர்ச்சி, அபிவிருத்தி, பேண்தகு அபிவிருத்தி)
4. முதன்மைப் பாறைகளின் எச்சங்களினால் உருவாக்கப்படுவதனால் ........................................ இரண்டாம் நிலைப்பாறைகள் எனப்படும்.
(தீப்பாறைகள், அடையற்பாறைகள், உருமாறிய பாறைகள்)
5. இலங்கையின் ........................................................ வலய நிலப்பகுதிகளில் குளத்தொகுதிகள் அவற்றுடன் தொடர்புடைய நீர்ப்பாசனத் தொகுதிகள் என்பவற்றைக் காணலாம்.
(உலர், ஈர, உயர்)
6. இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரியப்படல மின் உற்பத்தி நிலையம் ........................................................ நீர்த்தேக்கத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
(மொறஹககந்த, விக்டோரியா, மாதுறு ஓயா)
7. எதிர்வரும் 2024 அளவில் உலகின் மொத்தச் சனத்தொகை ........................................................ பில்லியன்களை எட்டவுள்ளது. (ஏழு, எட்டு, ஒன்பது)
8. தொழிற்சாலைகளில் இயந்திரப் பாவனை அதிகரித்துள்ளமை காரணமாகப் பாரியளவிலான ........................................................ பிரச்சினை ஏற்பட்டுள்ளது.
(தொழிலாளர் பற்றாக்குறை, வேலையில்லாப், மூலதனப்)
9. இலங்கையில் ........................................................ பயிர்ச்செய்கையில் கப்சீதா, கப்சுவாயா எனும் புதிய, விளைச்சலைத் தரக்கூடிய விதையினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
(நெல், தேயிலை, தென்னை)
10. பிலிப்பைன்ஸ் தீவுகளை அண்டிய பசுபிக் சமுத்திரப் பகுதியில் ஏற்படும் சூறாவளிகள் ........................................................ எனும் பெயரால் அழைக்கப்படுகின்றன.
(ஹரிக்கேன, தைப்பூன், பாகியஸ்)



பக் 2 ஐப் பார்க்க

kalvi.lk

- **11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் 'ச' ஐயும் பிழையாயின் 'பி' ஐயும் சுற்றி வட்டம் வரைக.**


11. ஒட்டுண்ணி, கீழ்வளரிகள் அதிகளவில் காணப்படும் இலங்கையின் இயற்கைத் தாவர வலயமாக உலர்கலப்பு என்றும் பசுமையான காடுகள் விளங்குகின்றன. ச / பி
12. சூறாவளிகள் அவற்றின் தீவிரத் தன்மைக்கேற்ப சுழல்காற்று, அமுக்க இறக்கங்கள், புயல்கள் என்னும் பெயர்களால் குறிப்பிடப்படும். ச / பி
13. உயிர்ச் சூழலில் உள்ள மூலக்கூறுகள் நீர்க்கோளம், வளிமண்டலம் மற்றும் கற்கோளம் என்பவற்றுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. ச / பி
14. இலங்கையில் பிங்கிரியவில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அமைக்கத் திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ச / பி
15. 1 : 50000 தேசப்படங்களை அவதானிக்கையில் குளம், கால்வாய், வீதி தொகுதிகளை அமைக்கும் போது தரைத்தோற்றம் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை தெளிவாகின்றது. ச / பி

- **16 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**


16. மனிதத் தலையீட்டினால் பௌதிகச் சூழலின் மீது கட்டியெழுப்பப்பட்ட அனைத்தும் ........................................................ எனப்படும்.
17. காரிப், ராபி என்பன ........................................................ பிரதான விவசாயப் பருவங்கள் ஆகும்.
18. நாட்டுக்குரிய சமுத்திர எல்லையைத் தீர்மானிக்கும் ........................................................1994 நவம்பர் 16 ஆம் திகதி முதல் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்தது.
19. இலங்கைத் தீவின் மிகப்பரந்த தரைக்கீழ் நீரின் இருப்பு ........................................................, முருங்கன் தாழிகளில் உள்ளது.
20. 59 வயதுக்கு மேற்பட்ட தங்கியிருப்போர் எண்ணிக்கை அதிகரித்தல் சனத்தொகை ........................................................ எனப்படும்.
21. ஆசிய நாடுகளில் ........................................................ பெரும்பாலும் ஊழியச் செறிவு கொண்ட பயிர்ச்செய்கையாகக் காணப்படுகின்றது.
22. இலங்கை 1 : 50000 தேசப்படங்களில் அதிவேக நெடுஞ்சாலை ஊதா நிறப் பயன்பாட்டுடன் ........................................................ எனும் எழுத்துக் குறியீட்டால் காட்டப்படும்.

- **23 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபினைப் பயன்படுத்துக.**

**இலங்கையின் இன அடிப்படையிலான சனத்தொகைக் கட்டமைப்பு - 2012**




**இலங்கையின் சமய அடிப்படையிலான சனத்தொகைக் கட்டமைப்பு - 2012**




**மூலம் : தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபர அறிக்கை**



பக் 3 ஐப் பார்க்க

kalvi.lk

23. சிங்களவர் வீதாசாரம் ................................................ எனக் காணப்பட பௌத்தர் வீதாசாரம் ................................ எனக் குறைவாகக் காணப்படக் காரணம் சிங்களவர்களில் ஒரு பகுதியினர் .................................. மதத்தவர்களாகக் காணப்படலாகும்.
24. இலங்கைத் தமிழர் வீதாசாரம் ................................................ எனக் காணப்பட இந்துக்கள் வீதாசாரம் ........................................ எனக் கூடிக் காணப்படக் காரணம் ................................. இந்துக்களாகக் காணப்படல் ஆகும்.
25. இலங்கை முஸ்லிம்கள் வீதாசாரம் ..................................................எனக் காணப்பட இஸ்லாமியர்கள் வீதாசாரம் ........................................ எனக் கூடிக் காணப்படக் காரணம் .................................. எனும் பிரிவில் உள்ளோரில் அதிகமானோர் இஸ்லாமியர்களாகக் காணப்படல் ஆகும்.
26. இலங்கைத் தமிழர் வீதாசாரம் ........................................... இந்தியத் தமிழர் வீதாசாரம் ........................................... எனவே இலங்கையில் தமிழர்களின் மொத்த வீதாசாரம் ........................................ ஆகும்.

- **27 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடைக்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

27.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. புவிச்சரிதவியல் ரீதியான இடர்கள் | A. காட்டுத்தீ |
| 2. காலநிலையியல் ரீதியான இடர்கள் | B. சுனாமி |
| 3. உயிரியல் ரீதியான அனர்த்தங்கள் | C. சூறாவளிகள் |

1. BCA 2. CAB 3. ABC 4. CBA (.........)

28.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. ஆசியா | A. அல்ப்ஸ் |
| 2. ஆபிரிக்கா | B. அல்ராய் |
| 3. தென்னமெரிக்கா | C. அற்லஸ் |
| 4. ஐரோப்பா | D. அந்தீஸ் |

1. BCDA 2. ACDB 3. DCBA 4. BDCA (.........)

29.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வரண்ட வலயம் | A. காலி, களுத்துறை |
| 2. இடைமாறு வலயம் | B. அனுராதபுரம், மட்டக்களப்பு |
| 3. தாழ்நில ஈரவலயம் | C. கண்டி, நுவரெலியா |
| 4. மலைப்பகுதிகள் | D. குருணாகல், மாத்தளை |

1. BADC 2. CADB 3. CDAB 4. BDAC (.........)

30.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சீனா | A. பிற்ஸ்பேர்க் |
| 2. ஐக்கிய அமெரிக்கா | B. கோபே |
| 3. ஜப்பான் | C. குஷ்நெட்ஸ் |
| 4. ரஷ்யா | D. தெற்கு மஞ்சூரியா |

1. DBAC 2. ADBC 3. DABC 4. CABD (.........)

- **31 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. பின்வருவனவற்றில் ஆசியாக் கண்டத்திற்குரிய சிறப்பம்சங்களை மட்டும் கொண்ட தொகுதி,
    1. அதி உயர்ந்த சிகரம், அதி உயர்ந்த இடத்திலமைந்த ஏரி
    2. அதி உயர்ந்த மழைவீழ்ச்சி, அதி உயர்ந்த இடத்திலமைந்த ஏரி
    3. அதி உயர்ந்த சிகரம், அதி உயர்ந்த மேட்டுநிலம்
    4. அதி உயர்ந்த இடத்திலமைந்த ஏரி, அதியுயர்ந்த மேட்டுநிலம் (.........)



பக் 4 ஐப் பார்க்க

kalvi.lk

32. சமாந்தரமான சிறிய மலைத்தொடர்கள், எச்சக் குன்றுகள், வெள்ளச் சமவெளிகள் என்பன காணப்படும் இலங்கையின் தரைத்தோற்ற வலயம்,

1. கரையோரச் சமவெளி    2. இடைநிலைச் சமவெளி
3. மத்திய மலைநாடு    4. ஈரவலயம்    (.........)

33. அரிஸ்டோட்டில், ஒஸ்ரின்மில்லர், தோண்வைற், கெப்பன் ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள்,

1. புவியின் தோற்றம் பற்றியவை    2. தகட்டசைவு பற்றியவை
3. புவிச்சரிதவியல் பற்றியவை    4. காலநிலை வலயப் பாகுபாடு பற்றியவை    (.........)


34. இலங்கையில் வனஜீவராசிகளுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவதுடன் விஞ்ஞான ரீதியான ஆய்வு நடவடிக்கைகளுக்காக மட்டுமே உட்பிரவேசிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ள வனஜீவராசிகள் ஒதுக்குகள்,

1. தேசிய பூங்காக்கள்    2. கடும் பாதுகாப்புக்குட்பட்ட இயற்கை ஒதுக்குகள்
3. சரணாலயங்கள்    4. இயற்கை ஒதுக்குகள்    (.........)

35. அண்மையில் மாத்தறை தொடக்கம் வெலியத்த வரை புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட போக்குவரத்து மார்க்கம்,

1. அதிவேக நெடுஞ்சாலை    2. A தரவீதி
3. கால்வாய் போக்குவரத்து    4. புகையிரத வீதி    (.........)

36.




மேலே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரிப்படங்களில் இலங்கை 1 : 50000 தேசப்படம் ஒன்றை முழுமையாகக் காட்டுவது,

1. A    2. B    3. C    4. D    (.........)

- **கீழே A, B, C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டிருக்கும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தலைப்புச் சோடிகளை நன்கு பரிசீலித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

A.1. மனித நடவடிக்கைகள்
 2. நீரின் தரம்

B.1. மரபணுத் தொழினுட்பம்
 2. நோய்த்தாக்கம்

C.1. வளமாக்கிகள் பாவனை
 2. உற்பத்தி

D.1. காடழிப்பு
 2. கடல் நீர் மட்டம்

37. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்பிற்குக் காரணமாகி சாதகமான நிலைமையைத் தோற்றுவிக்கும் சோடி,

1. A    2. B    3. C    4. D    (.........)

38. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்பிற்குக் காரணமாகி பாதகமான நிலைமையைத் தோற்றுவிக்கும் சோடி,

1. A    2. B    3. C    4. D    (.........)

39. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் குறைவிற்குக் காரணமாகி பாதக நிலைமையைத் தோற்றுவிக்கும் சோடி,

1. A    2. B    3. C    4. D    (.........)

40. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் குறைவிற்குக் காரணமாகி சாதக நிலைமையைத் தோற்றுவிக்கும் சோடி,

1. A    2. B    3. C    4. D    (.........)


**(40 ×1 40 புள்ளிகள்)**



பக் 5 ஐப் பார்க்க

kalvi.lk

03. உலகில் பாற்பண்ணைக் கைத்தொழில் முக்கியம் வகிக்கும் நாடுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.




i. இலக்கம் 1, 5 என்பவற்றால் குறித்துக் காட்டப்பட்டுள்ள பாற்பண்ணை உற்பத்தி நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. உலகில் வர்த்தக ரீதியான பாற்பண்ணைக் கைத்தொழிலின் விசேட பண்புகள் **மூன்று** தருக. (3 புள்ளி)

iii.a. இலங்கையில் புதிய பசு இனங்கள், புல் இனங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கும் ஆராய்ச்சி நிலையங்களில் **ஒன்றின்** பெயர் தருக.

b. இலங்கையில் அண்மைக் காலங்களில் விலங்கு வேளாண்மை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படக் காரணமாகும் விடயங்களில் **இரண்டைக்** குறிப்பிட்டு விவரிக்குக. (5 புள்ளி)

04.i. கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஒன்றாகிய முதலீட்டினை மேற்கொள்ளும் துறைகளில் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. உலகின் தயாரிப்புக் கைத்தொழில்கள் எதிர்நோக்குகின்ற சக்தி மற்றும் வலு தொடர்பான பிரச்சினைகள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளி)

iii.a. இலங்கைச் சுற்றுலா அதிகார சபையால் இனங்காணப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களில் **ஒன்றின்** பெயர் குறிப்பிடுக.

b. இலங்கைச் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்குச் சவாலாக உள்ள விடயங்களில் **இரண்டைக்** குறிப்பிட்டு விவரிக்குக. (5 புள்ளி)

05.i. உயிரியல் சார்ந்த வளங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. மனித செயற்பாடுகள் காரணமாக மண் உருவாக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளி)


iii.a. இலங்கையின் பிரதான நீர் மூலங்களில் **ஒன்றைக்** குறிப்பிடுக. (1 புள்ளி)

b. இலங்கையில் நீர் மூலங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)



kalvi.lk

06.i. சனத்தொகை தொடர்பான கற்கையில் இனங்காணக்கூடிய முக்கிய அம்சங்களில் ஒன்றான பிறப்பின் பின்னர் உரித்தாக்கிக் கொள்ளப்படுபவற்றில் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)




**The Ratio Differences In The Annual Population Growth Rate.**

ii.a. வரைபின்படி எந்த ஆண்டில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி உச்ச அளவைத் தொட்டது? (1 புள்ளி)

b. உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் **நான்கினையும்** குறிப்பிடுக. (2 புள்ளி)

iii.a. இலங்கையில் மொத்த சனத்தொகையில் 5.2% ஐக் கொண்டு குறைந்த சனத்தொகை கொண்டதாக விளங்கும் மாகாணம் எது? (1 புள்ளி)

b. கொழும்பின் சனத்தொகை அதிகரிப்புக்குக் காரணமென நீர் கருதும் **இரண்டு** காரணங்களை முன்வைத்து விவரிக்குக. (4 புள்ளி)

07.i. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியும் ஏற்படல் வேண்டும். சமூக அபிவிருத்தியில் உள்ளடங்கும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

**ii.** இலங்கையில் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளி)

iii.a. இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய அறிவை வழங்குவதற்காகச் செயற்படும் மூலங்கள் அல்லது நிறுவனங்கள் **இரண்டின்** பெயர் தருக. (2 புள்ளி)

b. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அறிவு விருத்தியால் சமூகத்திற்குக் கிடைக்கும் வசதிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (3 புள்ளி)

08.i. மனித செயற்பாடுகளால் தீவிரப்படுத்தப்படும் இயற்கை இடர்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. சூழல் நேயமற்றவையாகவும் சூழலுக்குத் தீங்கு விளைவிப்பவையாகவும் உள்ள மனித நடவடிக்கைகள் **மூன்று** தருக. (3 புள்ளி)


iii.a. அனர்த்தத்தை இழிவளவாக்கிக் கொள்ளல் என்றால் என்ன? (2 புள்ளி)

b. அனர்த்தத்தை இழிவளவாக்கிக் கொள்வதற்கான **இரண்டு** செயற்பாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (3 புள்ளி)



பக் 9 ஐப் பார்க்க

kalvi.lk




SCALE 1 : 50 000



பக் 10 ஐ பார்க்க

kalvi.lk

சுட்டெண் ..................................

பரீட்சகர்களுக்கு மட்டும்

(61) புவியியல்

1.(a)

I. ........................................

II. ........................................

III. ........................................

IV. ........................................

V. ........................................

VI. ........................................

VII. ........................................

VIII. ........................................

IX. ........................................

X. ........................................


10

Education கல்வி අධ්‍යාපන




kalvi.lk

(ආ) /(ஆ) /(b)




(i) | (ii) | (iii) | (iv) | (v) | /5

(ඇ) /(இ) /(c)




(i) | (ii) | (iii) | (iv) | (v) | /5

1. (අ) (அ) (a) $\frac{}{10}$ (ආ) (ஆ) (b) $\frac{}{5}$ (ඇ) (இ) (c) $\frac{}{5}$ = $\frac{}{20}$



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page